**ஹம்பாந்தோட்டை மாநகர சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் நகர முதல்வர் உட்பட அங்கத்தவர்களுக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்கீட்டு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கும் முன்னைய ஆண்டு இறுதி மீதிக்கும் இடையே 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 3,948,063 தொகை குறைவாக/ மிகையாக காட்டப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டின் மீதி சரியாக முன்கொண்டு செல்லப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக கணக்குகள் தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபை ஆதனங்களின் அபிவிருத்தி வேலை ஒன்று தொடர்பாக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 378,274 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 569,800 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஜனவரி முதல் ஒக்தோபர் வரை கிடைத்திருந்த அட்டவணைகளை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

### (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 17,363,437 தொகையான மீதிகள், அவற்றுடன் தொடர்புடைய துணைப்பதிவேடுகள்/ பதிவேடுகள் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 751,412 தொகைக்கான சமமின்மைகள் காணப்பட்டது. | கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் தொடர்பாக துணைப் பதிவேடுகள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | வித்தியாசத்தை பரிசோதனை செய்து எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 3,662,834 தொகைக்கான 17 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்பித்திருக்க வில்லை. | நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நாட்டில் காணப்பட்ட சீரற்ற சுகாதார நிலைமையின் காரணமாக தகவல்கள் வழங்குவதற்கு முடியாமையும், அடுத்த வருடம் அட்டவணைகள் சரியாக சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி, முத்திரைக் கட்டணம், வருமான முற்பெறுவனவுகள் என்பவற்றிற்கான பதிலுடன் அட்டவணைகள் சமர்ப்பிக்கப் பட்டன என அறிவிக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 230(1) | சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள இனங்காணப்பட்ட முன்னேற்றிய பிரதேசங் களில் இருந்து வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டில் அனைத்து வட்டாரங் களிலிருந்தும் வீதவரி மற்றும் ஏனைய வரிகள் அறவிடப் படுகின்றன என அறிவிக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்<br>------------------------------------ | | | |
| (i) | நி.பி. 571 | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 231,214 இற்கான வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப்பிரமாணங்களின் படி செயற்படுவேன். |
| (ii) | நி.பி. 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்ப மிடப்படும் உடன்படிக்கை களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக் கவில்லை. | நிதிப்பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிர்மான வேலைகளுக்கான உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்பிக்கின்றேன். |
| (iii) | நி.பி. 1645(ஆ),(இ) மற்றும் 1646 | சபையின் 24 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டி ருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அனைத்து வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் எதிர் காலத்தில் அனைத்து மாதங்களிலும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | ஏனைய சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்கள்<br>------------------------------- | | | |
| (i) | தென் மாகாண பிரதான செயலாளரின் (நிதி) 2014 பெப்ரவரி 24 திகதிய 01/2014 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் 08 பேரிடம் ஊழியர் பிணை பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கை களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தற்போது 08 ஊழியர்கள் ஊழியர் பிணை வைப்புச் செய்துள்ளார்கள் என அறிவிக்கின்றேன். |
| (ii) | பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2015 ஒக்தோபர் 09 திகதிய PED/REG/2015/08/பொது(i) இலக்கங் கொண்ட கடிதத்தின் பந்திகள் 4.3 (அ),(உ) | இடமாற்றம் பெற்றுச்சென்று ள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 16 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 751,542 இற்கான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் 2020 ஆண்டின் போது ரூபா 326,790 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோக த்தர்களின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்த மற்றும் பிணையாளர்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,017,429 தொகை ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 1,198,539 தொகையாகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 6,528,291 | 7,548,639 | 7,058,897 | 2,229,058 | 5,627,613 | 6,086,497 | 4,377,135 | 1,919,022 |
| வாடகை | 28,221,051 | 21,585,957 | 21,120,705 | 916,238 | 14,909,185 | 15,237,900 | 4,753,682 | 459,282 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,512,000 | 4,327,471 | 3,633,621 | 746,950 | 5,053,000 | 4,214,873 | 4,061,123 | 149,500 |
| ஏனைய வருமானங்கள் | 3,782,000 | 8,679,625 | 5,340,257 | 4,436,387 | 10,798,000 | 9,580,086 | 17,123,628 | 4,298,160 |
| மொத்தம் | 42,043,342 | 42,141,692 | 37,153,480 | 8,328,633 | 36,387,798 | 35,119,356 | 30,315,568 | 6,825,964 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய வீதவரி வரி ரூபா 2,187,558 தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வீதவரி வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். | நிலுவைத் தொகையில் 2020 மே 30 திகதி வரை ரூபா 235,465 தொகை அறவிடப்பட்டுள்ளன என அறிவிக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) வீதவரி ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும் 2013 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் மீது மீளாய்வாண்டிற்கான வரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | 05 வருடங் களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு திருத்தப்பட வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தில் பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் 2019 ஜுலை 08 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 ஜனவரி 17 திகதி பூர்த்தி செய்யப்பட்டதுடன் அதற்கான பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் இதுவரை சபைக்கு கிடைத்திருக்கவில்லை. |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வாடகை வருமானம் ரூபா 28,221,051 தொகை மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 21,585,957 தொகையாக காணப்பட்டமையால் நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆண்டிற்கான மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு பந்தியுடன் உடன்படுகிறேன் என அறிவிக்கின்றேன். |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திர கட்டணம் வருமானம் ரூபா 3,512,000 தொகை மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 4,327,471 தொகை ஆகக் காணப்பட்டமையால் நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரித்திருக்கவில்லை. | ஆண்டிற்கான மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படாதிருந்த போதிலும் ஆண்டின் போது புதிய அறிவித்தல் பலகைகள் பொறுத்தப்பட்டிருந்தமையால் மதிப்பீடு உண்மையான வருமானத்துடன் வித்தியாசமாக இருந்ததென அறிவிக்கின்றேன். |
| (ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 93,750 தொகையாக காணப்பட்டதுடன் அம் மீதியில் 02 வருடங்கள் மற்றும் 03 வருடங்கள் இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 61,250 தொகை ஆகும். | நிலுவை அனும திப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையில் 2020 மே 30 திகதி அளவில் ரூபா 8,500 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், மீதி நிலுவை தொகையை எதிர்காலத்தில் அறவீடு செய்வேன் என அறிவிக்கின்றேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் முறையே ரூபா 112,000 தொகை மற்றும் ரூபா 3,284,500 தொகையாக காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 112,000 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணத்தில் ரூபா 2,640,000 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், மீதியான நிலுவையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 272 இன் கீழ் 32 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்கவேண்டிய இருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை 29 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | துணை விதிகள் ஆக்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 03 துணை விதிகளை தழுவி இருக்காததுடன், அவற்றில் XI மற்றும் XXIV விதிகளின் பிரகாரம் மாநகர சபைக்கு தொடர்பில்லாததுடன், XXIII ஆகிய விளம்பர அறிவித்தல் பலகை துணை விதி தற்போது தழுவியுள்ளேன் என அறிவிக்கின்றேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவை செய்ய வேண்டும். | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பிரிவின் பிரகாரம் சபைக்கு காட்டப்பட்டுள்ள பங்களிப்பின் பிரகாரம் மற்றும் 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாக கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கின்றேன். |

### (இ) நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படும் நிர்மாண வேலைகள் மற்றும் அபிவிருத்தி விடயங்களுக்காக மீளாய்வாண்டின் பாதீட்டு மூலம் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதி ஏற்பாடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆண்டின் மீண்டுவரும் வருமானம் மீண்டுவரும் செலவுகளை மேற்கொள்வதற்கு மாத்திரம் போதியளவாக இருந்தமையால் நிர்மான வேலை அபிவிருத்தி அலுவல்களுக்காக நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ள முடியாதிருந்ததென அறிவிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 07 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் எழுத்துமூல உடன்படிக்கை மூலம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | எழுத்துமூல உடன்படிக்கை மூலம் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் ஒப்படைக்கப்பட்டு கோவைகள் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். | தற்போது கோவைகள் நாளதுவரை ஆக்கப்பட்டுள்ள துடன் மற்றும் இது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 29 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகை பதவியணி 52 இனை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகைப் பதவிகள் முறைப்படுத்துவது மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புதல் தென் மாகாண பிரதான செயலகத்தினால் மேற்கொள்ளப் படுவதுடன், அது தொடர்பாக விண்ணப்பித்துள்ளேன் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | ஐந்து உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட கடமைகள் அல்லாத வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் | பதவிகளுக்காக கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். | சபையில் காணப்படும் வெற்றிடங்கள் காரணமாக நிலையான கடமைகளுக்கு புறம்பாக வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அறிவிக்கின்றேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சம்பளமற்ற விடுமுறைகளுக்காக ரூபா 24,181 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சம்பளமற்ற விடுமுறைக்கான படிகள் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 கொண்ட பொதுநிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் மற்றும் மனிதவள திட்டம் ஒன்று மீளாய்வாண்டிற்காக தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய உடன்படிக்கைகள் மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை மற்றும் மனிதவள திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 42 காணிகள் மற்றும் 07 வாகனங்கள் என்பவற்றின் பதிவு செய்யப்பட்ட உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களை சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரித்தாக்கப்படாத வாகனங் களை உரித்தாக்கி தரும்படி பிரதான செயலகத்திற்கு அறிவுறுத்தியதுடன் காணி களை உரித்தாக்கித் தரும்படி உரிய நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன். |

#### 3.4.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 02 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் மற்றும் சினிமா கொட்டகை ஒன்று பயன்படுத் தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களை 2021 ஆண்டில் திருத்துவதற்கு குறித்துக் கொண்டதுடன் கட்டடங்கள் அமைந்துள்ள இடங்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொண்டு பொருத்தமான செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5 பெறுகை

#### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.3 இன் பிரகாரம சபையினால் மீளாய்வாண்டிற்காக முறையான பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்காததுடன், அத்திட்டம் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வதற்கும் திட்டத்தை அமுல்நடத்துவதற்கும் முறையான கால சட்டகமொன்று தயாரித்திருக்கவில்லை. | முறையாக பெறுகை திட்டம் மற்றும் கால சட்டகம் தயாரிக்கப்பட வேண்டும். | 2021 ஆண்டிற்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கும் போது 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்படுவேன். |